©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 142] CHENNAI, WEDNESDAY, MAY 18, 2011
Vaikasi 4, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை.**

**திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், காரம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. அ2/3100/2007)*

**No. VI(2)/281(c)/2011.**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், காரம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி P. காமாட்சி என்பவர் அரசாணை எண் 167, ஊரக வளர்ச்சித் (C–4) துறை, நாள் 09–08–1999–ன்படி ஊராட்சி மன்றக் கூட்டம் கூட்டாமைக்காகவும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு எண் 46–ன்படி எவ்வித கடமைகளும் மற்றும் பணிகளும் மேற்கொள்ளாமைக்காகவும் ஊராட்சி மன்றத் தலைவருக்கான எவ்வித பணிகளையும் செய்யாமல் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 110–ன்கீழ் அடிப்படை கடமைகளிலிருந்து தவறியமைக்காகவும் அவருக்கெதிராக 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205–ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர் அவரின் மீதான குற்றச்சாட்டுகள், காரம் ஊராட்சி மன்றத்தின் கருத்து ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும் ஆழ்ந்தும் பரிசீலனை செய்து, இவர் ஊராட்சி நிர்வாக அலுவலர் / ஊராட்சி மன்றத் தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளது நிரூபணமாவதாக எனது உளத் தேர்வின்படி தீர்மானித்து, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 (11)–ன்கீழ் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இவரை காரம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இந்த அறிவிக்கை நடைமுறைக்குவரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை,
2011 மே 17.

**மு. ராஜேந்திரன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (142)